தினமணி

இலவச ஆடு, மாடு வழங்கும் திட்டத்தை சீரமைக்க கோரிக்கை

First Published : 15 Aug 2012 12:40:47 PM IST

தஞ்சாவூர், ஆக. 14: தமிழக அரசின் விலையில்லா ஆடு, மாடு வழங்கும் திட்டத்தில் மறுசீரமைப்பு தேவையென தமிழ்நாடு ஊராட்சித் தலைவர்கள் கூட்டமைப்பின் மாநில அமைப்புச் செயலர் வீர. மோகன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் தமிழக முதல்வருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனு:

தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள விலையில்லா கறவைமாடுகள், ஆடுகள் வழங்கும் திட்டம் ஏழை, எளிய மக்கள் பொருளாதார மேம்பாடு அடைய கொண்டுவரப்பட்டத் திட்டம்.

இதற்கான நடைமுறையில் ஊராட்சித் தலைவர்கள் தலைமையில் தேர்வுக்குழு இருந்தாலும், உண்மையான பயனாளிகளைத் தேர்வு செய்ய முடியாத அளவிற்கு நெருக்கடி உள்ளது. அரசியல் தலையீடு காரணமாக நிர்ப்பந்தத்தின் அடிப்படையிலேயே பயனாளிகள் தேர்வு நடைபெறுகிறது.

ஏழை, பணக்காரர்கள் வித்தியாசம் இல்லாமல், அனைத்துத் தரப்பு மக்களுமே இந்தத் திட்டப் பயன்களைப் பெற போட்டியிடுவதால், பயனாளிகள் பட்டியலில் இடம் பெறாதவர்கள் சட்டம்-ஒழுங்கு பிரச்னையை ஏற்படுத்துவதோடு, திட்டமிட்டு அவதூறு செய்திகளை பரப்பி, ஊராட்சித் தலைவர்களுக்கு சிக்கலை ஏற்படுத்துகின்றனர். இதனால், ஊராட்சிப் பணிகள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன.

மாற்றாக, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய ஊராட்சிகளைத் தேர்வு செய்து தகுதியுடைய பயனாளிகள் எண்ணிக்கைக்கு ஏற்ப ஆடு, மாடு ஒதுக்கீடு எண்ணிக்கையை அரசு அறிவிக்க வேண்டும். தற்போது ஒரு ஊராட்சிக்கான ஒதுக்கீட்டை அரசே நிர்ணயித்து அறிவிப்பதால், ஊராட்சியில் வேண்டாத சம்பவங்களும், பிரச்னைகளும் ஏற்படுகின்றன.

எனவே, அரசியல் தலையீடு இல்லாமலும், சட்டம்-ஒழுங்கு பிரச்னை ஏற்படாத வகையிலும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பசியால் வாடும் 1 லட்சம் ஈமு கோழிகள்

First Published : 16 Aug 2012 02:37:26 AM IST



ஈரோடு, ஆக. 15: ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஈமு கோழிப் பண்ணைகளில் சுமார் 1 லட்சம் கோழிகள் தீவனம் இன்றி பசியால் வாடி வருகின்றன.

பல்வேறு ஈமு கோழி நிறுவனங்கள் மோசடிக் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியுள்ள நிலையில், ஈரோடு மாவட்ட பண்ணைகளில் சுமார் 1 லட்சம் ஈமு கோழிகள் தீவனமின்றி பசியால் வாடி வருகின்றன. அவை ஒன்றையொன்று தாக்கிக் கொள்வதால் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

பெருந்துறையில் உள்ள சுசி ஈமு பண்ணைகளில் இருக்கும் கோழிகளுக்கு தீவனம் வழங்க வருவாய்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதற்காக மத்திய அரசின் உணவு சேமிப்புக் கிடங்குகளில் சிதறிக் கிடக்கும் தானியங்களை இலவசமாகப் பெற்று கோழிகளுக்கு வழங்கி வருகின்றனர். ஆனால், கோழிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் இந்தத் தீவனம் போதுமானதாக இல்லை.

மற்ற பண்ணைகளில் இருக்கும் ஈமு கோழிகள், பராமரிக்க ஆள்களும் இன்றி, தீவனமும் இன்றி அனாதையாகக் கிடக்கின்றன. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் சுமார் 1 லட்சம் ஈமு கோழிகள் தீவனம் இன்றி தவித்து வருகின்றன.

ஒரு கோழி தினமும் 1 கிலோ தீவனம் உண்ணும். அனைத்துக் கோழிகளுக்கும் தீவனம் வழங்க தினமும் ரூ. 3.5 முதல் ரூ. 4 கோடி வரை செலவாகும். எனவே, என்ன செய்வதென்று தெரியாமல் அதிகாரிகள் தவித்து வருகின்றனர்.

பண்ணைகளில் இருக்கும் கோழிகள் தவிர தமிழகம் மற்றும் பிற மாநிலங்களில் உள்ள விவசாயிகளிடம் 3 முதல் 3.5 லட்சம் கோழிகள் வரை இருக்கலாம் என தெரியவந்துள்ளது.

இவற்றுக்கு இதுவரை நிறுவனங்கள் மூலமாக தீவனம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த ஒரு வாரமாக நிறுவனங்கள் தீவனம் வழங்காததால், ஈமு பண்ணைகளில் முதலீடு செய்துள்ள விவசாயிகள் தங்களது ஈமு கோழிகளுக்கு தீவனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து வருவாய்த் துறை உயர் அதிகாரி ஒருவர் கூறியது:

மோசடியில் ஈடுபட்ட ஈமு கோழி நிறுவனங்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. நிறுவன அதிபர்களின் சொத்துகளை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏலச் சீட்டு, நிதி நிறுவன மோசடி வழக்குகளில், மோசடியில் ஈடுபடுவோரின் சொத்துகளை முடக்கி முதலீட்டாளர்களுக்கு

பிரித்து வழங்குவது வழக்கம். ஆனால், இப்போது ஈமு கோழி மோசடி வழக்குகளை கையாளுவது புதுவிதமாக உள்ளது.
உயிருடன் இருக்கும் ஈமு கோழிகளை இறைச்சிக்காக வெட்டவும் முடியாது. விற்பனை செய்யவும் இயலாது. எனவே, இந்த வழக்கு விசாரணையை எப்படி மேற்கொள்வது என்பது தொடர்பாக ஆலோசித்து வருகிறோம் என்றார்.

## பருவமழைக் குறைவால் பணவீக்கம் அதிகரிக்கும்

First Published : 16 Aug 2012 12:05:00 AM IST

மும்பை, ஆக.15: நடப்பு ஆண்டில் பருவ மழைக் குறைபாட்டால் உணவுப் பணவீக்கம் மட்டுமின்றி ஒட்டுமொத்த பணவீக்கமும் அதிகரிக்கும் என்று இந்திய பொருளாதாரத்துக்கான மத்திய கண்காணிப்பு மையம் (சிஎம்ஐஇ) தெரிவித்துள்ளது. தென் மேற்குப் பருவ மழையும் போதுமான அளவுக்கு இருக்காது என்றே தெரிகிறது. இதனால் பிரதான உணவுப் பொருள்களான நெல், கோதுமை விளைச்சல் குறையும்.
இதனால் உணவுப் பொருள்களின் விலை கடுமையாக உயர்வதோடு பணவீக்கமும் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டியுள்ளது. பருப்பு வகைகள், எண்ணெய் வித்துகள், காய்கறிகளின் விலை கணிசமாக உயரும். இதனால் நடப்பு நிதி ஆண்டில் உணவுப் பணவீக்கம் 9.7 சதவீதம் அளவுக்கு உயரும் என தெரிவித்துள்ளது. ஜூன் முதல் ஆகஸ்ட் வரையான காலத்தில் மழை அளவு 21 சதவீத அளவுக்குக் குறைந்துள்ளது.
குறுவை சாகுபடி செய்யும் மாநிலங்களான குஜராத், ராஜஸ்தான், கர்நாடகம், மகாராஷ்டிரம், உத்தரப்பிரதேசம், உள்ளிட்ட பகுதிகளில் மழையளவு குறைந்துள்ளதால் சாகுபடி 10 சதவீத அளவுக்குக் குறையும் என்றும் தெரிவித்துள்ளது.

தினமலர்
உண்மையின் உரைகல்

# பருப்பு வகைகளின் குறைந்தபட்ச ஆதரவு விலை உயர்த்தப்பட்டது

ஆகஸ்ட் 16,2012,02:22



மத்திய வேளாண் அமைச்சகம், நடப்பு 2012-13ம் நிதியாண்டிற்கு, பருப்பு வகைகளின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி யுள்ளது. இதன்படி, ஒரு குவிண்டால் துவரம் பருப்பின் கொள்முதல் விலை,3,840 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. அது போன்று, ஒரு குவிண்டால் பாசிப் பருப்பின் விலை, 4,400 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. உளுத்தம் பருப்பின் குறைந்தபட்ச ஆதரவு விலை, மாற்றமின்றி, குவிண்டாலுக்கு, 4,300 ரூபாய் என்ற அளவிலேயே உள்ளது.

வேளாண் செலவு மற்றும் விலைகள் ஆணையம், நடப்பு நிதியாண்டிற்கு, ஒரு குவிண்டால் துவரம்பருப்பிற்கான, குறைந்தபட்ச ஆதரவு விலையை 4,000 ரூபாயாகவும், ஒரு குவிண்டால் பாசிப் பருப்பிற்கான விலையை, 4,500 ரூபாயாகவும் உயர்த்துமாறு, மத்திய வேளாண் அமைச்சகத்திற்கு பரிந்துரைத்திருந்தது. ஆனால், இவற்றை விட, குறைவாகவே மத்திய வேளாண் அமைச்சகம் விலை நிர்ணயம் செய்துள்ளது.

பருவமழை குறைவால் காபி உற்பத்தி சரியும்

ஆகஸ்ட் 15,2012,00:38



புதுடில்லிநாட்டில் பருவ மழை குறைந்துள்ளதால், வரும் அக்டோபர் மாதம் துவங்கும், 2012-13ம் பருவத்தில் (அக்.,-செப்.,), காபி உற்பத்தி, 3.25 லட்சம் டன்னாக சரிவடையும் என, காபி வாரியம் மதிப்பீடு செய்துள்ளது.

மேற்கண்ட மொத்த காபி உற்பத்தியில், அராபிகா 1.04 லட்சம் டன்னாகவும், ரோபஸ்டா 2.21 லட்சம் டன்னாகவும் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

காபி அதிகம் விளையும் பகுதிகளான, கர்நாடகா, கேரளா மற்றும் தமிழகம் ஆகிய பகுதிகளில் பருவமழை மிகவும் குறைந்துள்ளது.

கடந்த 2011ம் ஆண்டு நவம்பர் முதல் நடப்பாண்டு ஏப்ரல் வரையிலுமாக, மழையின் அளவு மட்டுமின்றி, நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து போனதால், ரோபஸ்டா வகை காபி உற்பத்தி மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.

**மொட்டை மாடியில் பரங்கி சாகுபடி** பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,00:00 IST



புதிய சாகுபடி முறை: தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருச்சடைவளந்தை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஆர்.சிவானந்தம். இவர் மொட்டைமாடியில் எந்தப் புறத்தில் நல்ல சூரிய ஒளி கிடைக்கும் என்பதை தெரிந்துகொண்டார். பிறகு பூமியில் அரை அடி குழிவெட்டி, நன்கு ஆறவைத்து, மக்கிய தொழு உரம் 10 கிலோ வைத்தார். விதைப்பதற்கு 30 நாட்களுக்கு முன் ஒரு கிலோ மக்கிய தொழு உரத்தில் சூடோமோனாஸ் 20 கிராம், அசோஸ்பைரில்லம் 50 கிராம், பாஸ்போ பாக்டீரியா 50 கிராம் இவைகளைக் கலந்து நிழலில் நீர் தெளித்து (குழியில்) உடனே வைத்தார். குழியில் சாணிப்பாலில் ஊறவைத்த மூன்று விதைகளை நடவுசெய்தார். குழியை சுற்றி தடுப்பு வேலி அமைத்தார். இது ஆடு, மாடு, கோழி, எலி இவைகளின் பாதிப்பினை தடுத்தது. பத்து நாட்கள் கழித்து குழியில் முளைத்துள்ள மூன்று செடிகளில் நல்ல திடமான செடி ஒன்றைதேர்ந்தெடுத்து மற்றவைகளை அகற்றினார். செடிகள் கொடிவிட்டு வளர்ந்தது. கொடியை விட்டுஅரை அடி தள்ளி கணு உள்ள மூங்கிலை நட்டார். கொடி மூங்கிலில் ஏறத்துவங்கியது. இந்தக் கொடியை மொட்டைமாடிக்கு கொண்டு செல்ல முயற்சிசெய்தார். கொடி கீழே சாயாமல் இருக்க ஒரு முறை கொடியை கயிற்றில் பூ நார் கொண்டு கட்டினார். இதனால் கொடி கீழே வளைந்துவிடாமல் நிமிர்ந்துசென்றது. கொடிகளில் எந்த பக்கத்துளிரும் இல்லாமல் மாடியை எட்டிவிடட்டது. மாடியை எட்டியவுடன் செடி பரவலாக மொட்டைமாடியில் பரவியது. ஏற்கனவே தேர்ந்தெடுத்த சூரிய ஒளி படும் இடத்தில் செடி செழிப்பாக பரவியது. மாடியில் பரவும் இந்த செடி

ஒரு விதையில் பிறந்து வளர்ந்தது ஆகும். இந்த செடி ஜூலை மாதம் விதைக்கப்பட்டது. அக்டோபர் மாதம் பூக்கள் பூத்தன. ஜனவரி மாதம் பரங்கி பிஞ்சுகள் விட்டு அறுவடைக்கு வந்துவிட்டது. செடியின் வேர் பூமியில் உள்ளது. காய்கள் மொட்டைமாடி மேல் காய்க்கின்றது. இதனால் ஆடு மாடுகள் போன்றவைகளால் பாதிக்கப் படவில்லை. காய்த்த காய்கள் மொட்டை மாடி மேல் அப்படியே இருந்து முதிர்ச்சி அடைந்தது. விவசாயிக்கு ஒரு விதையில் அறுபது பரங்கி (முதிர்ச்சி அடைந்தது) கிடைத்தது. ஒரு பரங்கி இருபது கிலோ எடை இருந்தது. வீட்டு உபயோகத்திற்கு போக ரூ.5000க்கு விற்கப்பட்டது.

குடும்பத்தின் உதவி: வீட்டில் விவசாயியின் மனைவி மற்றும் பள்ளி செல்லும் பெண் குழந்தைகள் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவதும் காய்களை அறுவடை செய்து கடையில் விற்பனையும் செய்துவந்தார்கள். பெண்களுக்கும் விவசாயத்தின் மேல் ஆசையும் வந்துவிட்டது. பிஞ்சுக் காய்களைவிட்டு நல்ல முதிர்ச்சி அடைந்த காய்கள் விற்பனை செய்யப்பட்டது. விவசாயி செய்த புதிய சாகுபடி முறையை மக்கள் நேரில் வந்து பார்த்தனர்.

கிராமங்களிலும் நகரங்களிலும் மொட்டைமாடியில் எளிமையாக செய்யக்கூடிய லாபகரமான, மனமகிழ்ச்சியை கொடுக்கக்கூடிய விவசாயம். பள்ளிக் குழந்தைகளை ஈடுபடுத்துவதால் விவசாயத்தில் அவர்களுக்கு மிகுந்த ஆர்வம் ஏற்படுகிறது.

மிக முக்கியமான கருத்துக்களை நாட்டின் நன்மைக்காக தனது செயல்விளக்கம் மூலம் நிரூபித்த விவசாயி சிவானந்தத்தை நாம் அனைவரும் பாராட்ட வேண்டும்.

கிராமத்தில் வெற்றிகரமாக சாகுபடி செய்த பரங்கியை நகரத்தில் உள்ளவர்களும் செய்யலாம். சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு விவசாயத்தில் ஆழ்ந்த பற்றும் இருக்க வேண்டியது அவசியம்.

மொட்டை மாடியில் தொட்டிகளில் காய்கறிகள் சாகுபடி செய்யலாம். தற்போது கடைகளில் காய்கறிகளின் விலை மிக அதிகமாகிவிட்டது.

இம்மாதிரி காய்கறிகளை விலைக்கு வாங்காமல் மொட்டை மாடியில் சாகுபடி செய்தால் நமக்கு தரமிக்க காய்கறிகள் கிடைக்கும். காய்கறிகளை விற்றாலும் லாபம் கிடைக்கும்.

மொட்டை மாடியில் தொட்டிகளில் காய்கறி மற்றும் மலர் சாகுபடி செய்ய தமிழ்நாடு விவசாய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மக்களுக்கு பயிற்சியும் அளிக்கின்றனர்.

**நவீன தொழில்நுட்பம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,00:00 IST



**சின்னவெங்காயம் -அறுவடை பின் சார் தொழில்நுட்பங்கள்:** நன்கு பதப்படுத்தப்பட்ட வெங்காயத்தில் ஒரு கனமீட்டருக்கு 50 கிராம் கந்தகம் என்ற அளவில் 3 மணி நேரத்திற்கு மேல் ஆவியாகச் செலுத்தினால் எவ்வித எடைக்குறைவுமின்றி நோயினால் ஏற்படும் இழப்பு 43 சதத்திலிருந்து 2.5 சதம் வரை குறைவதாக தேசிய வெங்காயம் மற்றும் பூண்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது. மேலும் காமாக் கதிர்களைக் கொண்டு கதிர்வீச்சுக்கு உட்படுத்துவதால் முளைத்தல் தடுக்கப்படுவதாக வும் எடைக்குறைவு எதுவும் நிகழ்வதில்லை எனவும் தெரியவந்துள்ளது. பொதுவாக கரும்படல நோயின் தாக்குதல் சிவப்பு, இளஞ்சிவப்பு, மஞ்சள் வகைகளைக் காட்டிலும் வெள்ளை வகைகளில் அதிகமாக இருக்கும். அஸ்பர்ஜில்லஸ் பியூசோபியம், பெனிசிலியம் சிற்றனங்களே அழுகலை உண்டாக்கும் பூஞ்சாணங்களாகும்.

தமிழகத்தில் கோ.ஆன்.5 என்ற வெங்காயம் எளிதில் வளரக்கூடிய இளஞ்சிவப்பு நிறம் உருவ அமைப்பைக் கொண்டுள்ளது. இந்த ரகத்தில் அறுவடை செய்வதற்கு 30 நாட்கள் முன்னதாக மாலிக் ஹைட்ரசைடு லிட்டருக்கு 1000 மி.கிராம் கார்பண்டசிம் என்ற அளவில் தெளித்தால் விளைச்சல் அதிகரிப்பதோடு விளைபொருட்களின் தரம் மேம்படுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு தெளித்த பயிரிலிருந்து பெறப்பட்ட வெங்காயம் 2 செ.மீ. நுனியுடன் வைத்து பதப் படுத்தப்படுவதால் முளைத்தல் கட்டுப்படுத்தப் பட்டு சேமிப்புக்காலம் அதிகரிக்கிறது. இவ்வாறு பதப்படுத்திய வெங்காயத்தினை குறைந்த செலவிலான அடிப்பகுதியில் காற்று புகும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட சேமிப்புக் கட்டமைப்பில் எவ்வித ஊட்டச்சத்து மற்றும் தரக்குறைபாடுகள் இன்றி 6 மாதங்கள் வரை சேமித்து வைக்கலாம் என்று ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டுள்ளது.

**நீண்டகால சேமிப்பு நுட்பங்கள்:** அறுவடை செய்வதற்கு 30 நாட்களுக்கு முன்னதாக மாலிக் ஹைட்ரசைடு லிட்டருக்கு 2000 மிலி, கார்பன்டசிம் லிட்டருக்கு 1000 மில்லிகிராம் என்ற அளவில் தெளிக்க வேண்டும். தற்போது மாலிக் ஹைட்ரசைடு பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. அதற்கு மாறாக வேறு வளர்ச்சி தடுப்பு வேதிப்பொருட்களை சைகோசெல் லிட்டருக்கு 200 மில்லி கிராம் மற்றும் கார்பன்டசிம் லிட்டருக்கு 1000 மில்லிகிராம் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

அறுவடை செய்யப்பட்ட வெங்காய குமிழ்களை இலையுடன் 3 நாட்கள் வயலிலும் 2 நாட்கள் நிழலிலும் வைத்து உலர்த்த வேண்டும். பிறகு வெங்காய குமிழ்களின் கழுத்திலிருந்து 2 செ.மீ. நீளம் விட்டு அறுத்தல் வேண்டும். இவ்வாறு பதப்படுத்தப்பட்ட வெங்காயத்தை குறைந்த செலவிலான அடிப்பகுதியில் காற்று புகும் வண்ணம் அமைக்கப்பட்ட சேமிப்புக் கட்டமைப்பில் சேமித்து வைப்பதன்மூலம் வெங்காயத்தில் எவ்வித ஊட்டச்சத்து மற்றும் ஈரக்குறைபாடுகளின்றி 6 மாதங்கள் வரை சேமித்து வைக்கலாம்.

**சேமிப்பு கட்டமைப்பு:** குறைந்த செலவிலான அடிப்பகுதியில் காற்றுப்புகும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட சேமிப்பு கட்டமைப்பு ஒற்றை வரிசை கொண்டது. இந்த சேமிப்பு அமைப்பில் 5 டன் வரை சேமிக்கலாம். இந்த சேமிப்பு அமைப்பு மூங்கில்களைக் கொண்டு வடிவமைக்கப்படுகிறது. இவ்வமைப்பில் மேற்கூரை தூண்கள், அடித்தளம் போன்றவை மூங்கிலினால் அமைக்கப்படுகின்றன. 5 அடி இடைவெளியில் தூண்கள் அமைக்கப் படுகின்றன. இவ்வமைப்பு இரும்பு தூண்க்ள மூலம் தூக்கி நிறுத்தப்பட்டு அடிப்பகுதியில் காற்றோட்டம் இருக்குமாறு வடிவமைக்கப் படுகிறது. இவ்வமைப்பின் மேல்கூறை தென்னை ஓலை கொண்டு வேயப்படுகிறது. இவ்வமைப்பு வடக்கு-தெற்கு முகமாக அமைக்கப்பட வேண்டும்.

**அளவு:** நீளம்-4.5மீ, அகலம்-1.2மீ, பக்க உயரம் - 1.5மீ, நடுப்பகுதி-1.8மீ, அடிப்பகுதி-30ச.மீ., காற்றோட்டம்.

**கட்டுமானப்பொருள்:**

**கட்டமைப்பு கூறை :** பிளவுபடாத மூங்கில்,தென்னை ஓலைகளை மூங்கில் சட்டத்தின்மேல் வேய்தல்

**பக்க சுவர்கள் :** தாங்கியின் உதவியுடன் கூடிய பகுதி பிளவுபட்ட மூங்கில்

**தளம் :** செங்கல் தூண்கள் துணையுடன் கூடிய பிளவுபட்ட மூங்கில்

(தகவல்: முனைவர் வே.அன்புக்கரசி, முனைவர் ப.பரமகுரு, முனைவர் இல.புகழேந்தி, தோட்டக்கலைக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. போன்:0422-661 1283).-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்

**தரையிலேயே பீர்க்கங்காய் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,00:00 IST



நூழக்கமான பயிர்களை சாகுபடி செய்தால் போட்ட முதலை எடுப்பதற்குக்கூட வருமானம் கிடைப்பதில்லை. இதிலிருந்து மாறுதல் பெறத்தான் காய்கறிகளுக்கு மாறினர் விவசாயிகள். ஆனால் சில காய்கறிகளைப் பயிரிட பந்தல் அமைக்க வேண்டுமே! அதற்கென்று ஒரு பெரிய தொகையை அல்லவா செலவு செய்ய வேண்டியிருக்கிறதே என்ற புலம்பலோடு காய்கறிப் பயிரென்றால் "ஆளை விடுசாமி' என்று சொல்லும் நிலைக்கு வந்துவிட்டார்கள். ஆனால் இப்போது பந்தல்பயம் தேவையில்லை. பந்தலில் பயிர்செய்ய வேண்டிய காய்கறிப் பயிர்களை தரையிலேயே பயிர் செய்யலாம் என்ற நிலை வந்துவிட்டது.

தரையில் பீர்க்கைப் பயிரிட முதலில் நிலத்தை நன்றாக இரண்டு முறை உழவு செய்வோம். இதற்கு நாங்கள் தொழு உரம் போடவில்லை. உழவு செய்தபின் நான்கு அடி இடைவெளிகளில் ஓரடி அகலமுள்ள வாய்க்கால்களை அமைப்போம். வாய்க்கால்களின் இரண்டு பக்க கரையோரங்களிலும் ஒரு மீட்டருக்கு இடையில் ஒரு விதை என ஊன்றுவோம். அரை ஏக்கருக்கு 400 கிராம் விதை தேவைப்பட்டது. விதைப்பதற்கு தேவையான வீரிய ரக விதையை பெரம்பலூரிலிருந்து வாங்கிவந்தோம். பாசனம் செய்து அந்த ஈரத்தில்தான் விதைஊன்றுவோம். விதை ஊன்றியபிறகு வாரத்திற்கு இரு முறை பாசனம் செய்வோம்.

ஐந்தாவது நாளில் விதை முளைத்து வந்துவிடும். இருபதாவது நாளில் ஒரு முறை களைஎடுப்போம். பின் களை இருப்பதைப் பொறுத்து அகற்றுவோம். 35வது நாளில் செடியில் இருந்து பூ வர ஆரம்பிக்கும். இதிலிருந்து ஒரு 10 நாள் கழித்து அதாவது விதை ஊன்றிய 45வது

நாளில் 10 கிலோ டி.ஏ.பி., 5 கிலோ யூரியா, 2 கிலோ சல்பேட் ஆகியவற்றைக் கலந்து செடியைச் சுற்றி இடுவோம். உரமிட்டவுடன் நீர் பாய்ச்சிவிடுவோம். உரமிட்ட மறுநாளில் டைசர் மருந்தை டேங்குக்கு 10 மிலி என்ற அளவில் கலந்து தெளிப்போம். 50வது நாளிலிருந்து அறுவடை செய்ய ஆரம்பிக்கலாம். அதிலிருந்து 3 நாளைக்கு ஒரு அறுவடை என 125வது நாள் வரை தொடர்ந்து மேற்கொள்வோம். 60வது நாளில் முன் சொன்ன உரங்களை அதே அளவில் கலந்து இடுவோம். உரமிட்ட மறுநாளில் முன் சொன்ன மருந்தையே தெளிப்போம். எங்கள் நிலத்திற்குப் பக்கத்தில் வேறு யாரும் சாகுபடி செய்ய வில்லை என்பதால் பெரும்பாலும் எந்தவிதமான பூச்சிகளும் தாக்குவதில்லை. அப்படி ஏதாவது தாக்கினால் வேப்பங்கொட்டைச்சாறை தண்ணீரில் கலந்து தெளித்துவிடுவோம்.

50வது நாள் முதல் 125வது நாள் வரை மொத்தம் 25 அறுவடையை மேற்கொள்ளலாம். ஒரு அறுவடையில் 25 கிலோ முதல் 40 கிலோ வரை காய்கள் மகசூலாகக் கிடைக்கும். ஒவ்வொரு முறை அறுவடை செய்யும்போதும் சராசரியாக 30 கிலோ காய்கள் மகசூலாகக் கிடைத்துவிடுகிறது. இந்த அரை ஏக்கர் நிலத்திலிருந்து மொத்தமாக செய்யும் 25 அறுவடையில்இருந்து சராசரியாக 750 கிலோ மகசூல் கிடைத்துவிடுகிறது. அறுவடை செய்யும் காய்களை பெரம்பலூருக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்துவிடுகிறோம். அங்கு ஒரு கிலோ காய்க்கு 5 ரூபாய் முதல் 15 ரூபாய் வரை விலையாகக் கிடைக்கிறது. எப்படியும் ஒரு கிலோ காய்க்கு கமிஷனெல்லாம் போக சராசரியாக 10 ரூபாய் விலை கிடைக்கிறது. இதன்மூலம் அரை ஏக்கரிலிருந்து 125 நாளுக்கு 7,500 ரூபாய் வருமானமாகக் கிடைக்கிறது. இதற்கு பராமரிப்பு செய்வதற்காக 3,440 ரூபாய் செலவாகிறது. இதுபோக 4060 ரூபாய் நிகர லாபமாகக் கிடைக்கிறது. **-அகமது கபீர்,** தாராபுரம். 93607 48542.

**தென்னையில் ஊடு பயிராக கோகோ அறிமுகம் :ஹெக்டேருக்கு ரூ.75 ஆயிரம் வருவாய்?**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2012,02:01 IST

திருவள்ளூர் : தோட்டக்கலைத் துறை, தென்னை விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும் வகையில், மாவட்டத்தில் கோகோவை ஊடு பயிராக அறிமுகப் படுத்தி உள்ளது.
இதன் மூலம் ஹெக்டேருக்கு, 75 ஆயிரம் ரூபாய் வரை உபரி வருவாய் கிடைக்கும் என, @தாட்டக்கலைத் துறை தெரிவித்து உள்ளது.
சாக்லெட், உணவுப் பொருட் கள், பானங்கள், மருந்துகள் ஆகியவற்றில் கோகோ பயன்படுகிறது.
கோகோவின் தேவை ஆண்டுதோறும், 15 முதல் 20 சதவீதம் வரை அதிகரித்து வருகிறது.
இதன் தேவை, உற்பத்தியின் அளவை விட, அதிகமாக இருப்பதால், 60 முதல் 70 சதவீதம் வரை

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

முதல் முறையாக...

உலகத்தில் கோகோ உற்பத்தியில், இந்தியாவின் பங்கு, 0.3 சதவீதம் மட்டுமே. தமிழகத்தில், 2,500 ஹெக்டேரில் கோகோ பயிரிடப்பட்டு, ஆண்டுதோறும், 200 டன் கோகோ உலர் விதைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

தற்@பாது, கோவை, திருப்பூர் உள்ளிட்ட சில மாவட்டங்களில் கோகோ பயிரிடப்பட்டு உள்ளது. கோகோ பயிர் வளர்வதற்கு தேவையான தட்பவெப்ப சூழ்நிலையும், வசதி, வாய்ப்பும் திருவள்ளூர் மாவட்டத்தில் சாதகமாக உள்ளதாக, @தாட்டக் கலைத் துறை கருதுகிறது.

மாவட்டத்தில், 1,136 ஹெக்டேர் பரப்பளவில் தென்னை பயிரிடப்பட்டு உள்ளது. தென்னந் தோப்புகள் உள்ள பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், முதல் முதலாக கோகோ பயிரிடப்பட உள்ளது.

விவசாயிகளுக்கு பயிற்சி

இது குறித்து, மாவட்ட தோட்டக்கலைத் துறையின், துணை இயக்குனர், ரஞ்சன் பால் கூறியதாவது:

முதலில், ஐந்து ஹெக்டேரில் கோகோ பயிரை விளைவிக்கத் திட்டமிடப் பட்டு உள்ளது. இதற்காக பள்ளிப்பட்டு ஒன்றியம் தேர்வு செய்யப்பட்டு அங்குள்ள விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

டூ ஒரு ஹெக்டேருக்கு 500 செடிகள் வரை நடலாம்.

டூ ஒவ்வொரு செடிக்கும், 3 மீட்டர் நீளம், 3 மீட்டர் அகலம் விட வேண்டும்.

டூ 50 சதவீத நிழல் இருத்தல் அவசியம்.

டூ ஒரு செடி, நான்கு ரூபாய் என்ற விலையில் கிடைக்கும்.

டூ செடிகளை வாங்கி, அவற்றை நட, ஹெக்டேருக்கு, 12,500 ரூபாய் செலவாகும்.

டூ செடி வைத்த, நான்கு ஆண்டுகளில் அறுவடை செய்யலாம்.

டூ அரசு மானியம், ஹெக்டேருக்கு 12,000 ரூபாய் வழங்கப்படும்.

இதன் மூலம் விவசாயிக்கு ஆண்டுக்கு ஒரு ஹெக்டேரில், 75 ஆயிரம் ரூபாய் உபரி வருவாய் கிடைக்கும். ஆர்வமுள்ள விவசாயிகள் மேலும் தகவல் பெற, 98404 60393 எனது அலைபேசியில் தொடர்பு கொள்ளலாம்.

இவ்வாறு ரஞ்சன் பால் கூறினார்.

முதலில் அதிகாரிகளுக்கு

கோகோ பயிர் புதியது என்பதால், இதன் தொழில்நுட்பம் குறித்து தோட்டக்கலைத் துறையினருக்கு தனியார் சாக்லெட் நிறுவனம் கடந்த வாரம் பயிற்சி அளித்து உள்ளது. தென்னை பயிரில் ஊடு பயிராக எப்படி இதை நடுவது, பராமரித்தல், உரம் வைத்தல் உள்ளிட்ட அனைத்து தகவல்களையும் அவர்கள் தெரிவித்தனர்.

விரைவில், பள்ளிப்பட்டு ஒன்றியம் சாமந்தவாடா கிராமத்தில் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத் துறை பயிற்சி அளிக்கத் திட்டமிட்டு உள்ளது.

**நேந்திரம் வாழையை கொள்முதல் செய்ய வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,23:55 IST

பந்தலூர் : "தோட்ட கலைத்துறை மூலம் நேந்திரம் வாழை யை கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.கூடலூர், பந்தலூர் பகுதிகளில் உள்ள படித்து வேலையில்லாத இளைஞர்கள் பலர் நேந்திரம் வாழை விவசாயத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். நல்ல நிலையில் அறுவடைக்கு தயாரான ஒரு வாழை மரத்திலிருந்து 5 முதல் 7 கிலோ வரை காய்கள் கிடைக்கும். அறுவடை செய்யப்படும் நேந்திரம் வாழை காய்கள் "சிப்ஸ்' தயாரிக்கவும், பிற உணவுபொருட்கள் தயாரிக்கவும் மேட்டுப்பாளையம், கோவை மார்க்கெட்டுகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றன.மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில், கிலோவுக்கு 26 முதல் 28 ரூபாய் வரை விலை உள்ளது. பொதுவாக, ஓணப்பண்டிகை காலங்களில் நேந்திரன் அறுவடையும், விற்பனையும் அதிகரிக்கும். ஆனால், இந்த ஆண்டு நேந்திரம் வாழைக்கு விலை குறைந்துள்ளது விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, "தோட்ட கலைத்துறை மூலம் நேந்திரன் வாழையை கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

**தேயிலை வாரியம் சார்பில் விவசாய நிதி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,23:55 IST

குன்னூர் : குன்னூர் தேயிலை வாரியம் மூலம் விவசாயிகளுக்கு 14 லட்சம் ரூபாய் மதிப்பில் உதவிகள் வழங்கப்பட்டன.தென்னிந்திய தேயிலை வாரியம் மூலம், குன்னூர் தேயிலை வாரிய அலுவலகத்தில் சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது. தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் தலைமை வகித்தார். விழாவில், 15 தேயிலை விவசாயிகளுக்கு 4 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. வேலையில்லா பட்டதாரிகளுக்கு 50 சதவீத மானியத்தில் தேயிலை பறிக்கும் இயந்திரங்கள் 1.5 லட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கபட்டன. மூன்று சிறு விவசாயிகள் சங்கத்தினருக்கு 8 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மானியம் என மொத்தம் 14 லட்சம் ரூபாய் மதிப்பில் உதவிகள் வழங்கப்பட்டன. துணை இயக்குனர் அனுபம்தாஸ் வரவேற்றார். கிருஷ்ணமூர்த்தி, உபாசி விஞ்ஞானி ராமமூர்த்தி, லட்சமி நாராயணன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**விவசாயிகள்குறைதீர்கூட்டம்**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 16,2012,05:20 IST

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நாளை (17ம் தேதி) காலை 10.30 மணிக்கு நடக்கிறது.கலெக்டர் கலையரசி தலைமையில் நடைபெறவுள்ள கூட்டத்தில் அரசுத்துறை அதிகாரிகள் பலர் பங்கேற்க உள்ளனர். விவசாயம் தொடர்புடைய கோரிக்கைகளுக்கு தீர்வுகாண விரும்பும் விவசாயிகள் அனைவரும் கூட்டத்தில் பங்கேற்கலாம்.

**தோட்டக்கலைப் பயிர்களுக்கு மானியம் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,23:18 IST

தேவதானப்பட்டி: தோட்டக்கலைப்பயிர்களுக்கு மானியத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம், துல்லியப்பண்ணைத் திட்டம் ஆகியவற்றின் சார்பில் சொட்டுநீர் பாசனம் அமைக்க 75 சதவீதமும், 15 சதவீதம் இடுபொருட்களாக வழங்கப்படுகின்றன. தேசிய தோட்டக்கலை இயக்க திட்டம் சார்பில் வறட்சி பகுதியில் மா சாகுபடி செய்வதற்கு 9900 ரூபாய் மதிப்பிலான இடுபொருட்கள் மானியமாக கிடைக்கிறது. அடர் நடவு மா சாகுபடிக்கு 400 கன்றுகள், 24 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள், திசுவாழை சாகுபடிக்கு 32 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள், தென்னை ஊடுபயிராக கொக்கோ சாகுபடிக்க 12 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள், மல்லி, ரோஜா சாகுபடிக்கு ஹெக்டேருக்கு 12 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான இடுபொருட்கள் மானியாக வழங்கப்படுகிறது. மானியங்களைப் பெற அந்தந்தப் பகுதியில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். பெரியகுளம் பகுதி விவசாயிகள் வடுகபட்டி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள தோட்டக்கலை உதவி இயக்குனரை தொடர்பு கொள்ளவும்.

**காய்கறி திருவிழா**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,21:09 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் உழவர் சந்தையில் காய்கறி திருவிழா, மண்மாதிரி இயக்க கூட்டம் நடந்தது.

வேளாண் துணை இயக்குனர் முத்துமுனியாண்டி தலைமை வகித்தார். நிர்வாக அலுவலர் விநாயக மூர்த்தி வரவேற்றார்.
விவசாயி சங்க செயலாளர் ராமச்சந்திர ராஜா, ரோட்டரி சங்க தலைவர் சுப்புராம், செயலாளர் சுரேஷ்பாபு, உறுப்பினர்கள் ஆறுமுகம்,லட்சுமணன் உட்பட பலர் பேசினர்.
தோட்டக்கலைத்துறை சார்பில், மானிய விலையில்மிளகாய் விதைகள் , ரோட்டரி சங்கத்தின் சார்பில் குழி விதைகளும் வழங்கப்பட்டன.
ஏற்பாடுகளை, உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமச்சந்திரன், பாலசுப்பிரமணியன் செய்திருந்தனர்.

**பதனீர் உற்பத்தி குறைவால் விலை உயர்ந்த கருப்பட்டி**

பதிவு செய்த நாள் : ஆகஸ்ட் 15,2012,21:09 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூரில் பதனீர் உற்பத்தி குறைந்ததால், கருப்பட்டியின் விலை உயர்ந்துள்ளது.
ஸ்ரீவில்லிபுத்தூர், திருவண்ணாமலை, மம்சாபுரம் பகுதியில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. இதை நம்பி, பத்தாயிரத்திற்கும் அதிகமான விவசாயிகள் உள்ளனர். இதில் கிடைக்கும் பதனீரை சிலர், கூட்டுறவு சங்கங்களுக்கும், சிலர் தனியாக கருப்பட்டியாகவும் காய்ச்சி விற்பனை செய்து வந்தனர்.
இந்தாண்டு மார்ச்சில் பதனீர் உற்பத்தி துவங்கியது. கடந்தாண்டு ஓரளவு மழை பெய்ததால், பதனீர் உற்பத்தியும் எதிர்பார்த்த அளவு இருந்தது. ஏப்ரலில் பெய்த மழையால் பதனீர் உற்பத்தி அதிகரித்தது. ஆனால், பனை மரங்களில் ஏறுவோர் எண்ணிக்கை குறைந்தது. இதனால், பதனீர் உற்பத்தி அதிகரித்த போதிலும், விவசாயிகளுக்கு அதன் பலனை அடைய முடியாமல் போனது.
தற்போது மரங்களில் பதனீர் உற்பத்தி குறைய துவங்கியதால், கடந்த மாதம் ஒரு கிலோ ரூ. 65க்கு விற்ற கருப்பட்டி ,தற்போதுரூ.75 க்கு விற்பனையாகிறது.
பனை விவசாயி மாடசாமி ,"" பனை மரங்களில் ஏறுபவர்களின் எண்ணிக்கை தற்போது கடுமையாக குறைந்துள்ளது. இதனால் குறைந்தளவே பதனீர் இறக்க முடிந்தது.
தற்போது பதனீர் சீசன் முடிவுக்கு வந்துள்ளதால் ,கருப்பட்டி விலை ரூ.10 வரை அதிகரித்துள்ளது. வரும் மாதங்கள் பண்டிகை மாதங்கள் என்பதால், இதன் விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள் ளது," என்றார்.